




# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 153 | உள்ளூர் - 02.06.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 153 | வெளியூர் - 03.06.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**வறுமைக்கு குட்பை சொல்லும் பொருள்!**

**காரைக்குடி CECRI-யில் 24 பணியிடங்கள்!**


**ஆசிரியர்கள் நியமனம்: தமிழக அரசின் குட் நியூஸ்!**

**அண்ணாமலையின் அடுத்த அரசியல் அவதாரம்!**

## அமெரிக்காவுடன் சமாதான பேச்சு நிறுத்தம்: ஈரான்!

ஈரான், ஜூன். 02–

ஈரான் அரசாங்கம் அமெரிக்காவுடனான சமாதான பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது.




லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அமெரிக்காவுடன் நடத்தி வந்த அனைத்து மறைமுகப் பேச்சுவார்த்தைகளையும் ஈரான் உடனடியாக நிறுத்தியுள்ளது.

அத்துடன், உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தில் முக்கியப் புள்ளியாக விளங்கும் ‘ஹோர்முஸ் நீரிணையை முழுமையாக மூடப்போவதாகவும் ஈரான் அதிரடியாக அறிவித்துள்ளது.

ஈரானின் புரட்சிகர இராணுவப் படைப்பிரிவிற்கு நெருக்கமான ‘தஸ்னிம்’ (Tasnim) செய்தி நிறுவனம் இன்று இந்த விபரங்களை வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தற்காலிகப் போர்நிறுத்தத்தை நீடிப்பதற்கும், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளும் இடைத்தரகர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி வந்தன.

இந்நிலையில் இந்த அதிரடி முடிவை ஈரான் எடுத்துள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கைக்கான முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக லெபனான் விவகாரம் இருந்தது. ஆனால், இஸ்ரேல் லெபனானில் தொடர்ந்து போர்க்குற்றங்களில் ஈடுபட்டு வருவதால், போர்நிறுத்த ஒப்பந்தம் அனைத்து முனைகளிலும் மீறப்பட்டுள்ளதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து எக்ஸ் (X) தளத்தில் பதிவிட்டுள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, “ஒரு முனையில் போர்நிறுத்தம் மீறப்பட்டால், அது அனைத்து முனைகளிலும் மீறப்பட்டதாகவே அர்த்தம். அமெரிக்கா–ஈரான் போர்நிறுத்தம் என்பது லெபனான் உட்பட அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியதே” என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கும் அதன் ஆதரவு நாடுகளுக்கும் பாடம் புகட்டும் வகையில், ஈரான் மற்றும் அதன் ஆதரவு ஆயுதக் குழுக்களின் கூட்டமைப்பு சில நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளன.

சர்வதேச எண்ணெய் போக்குவரத்தின் உயிர்நாடியாகக் கருதப்படும் ஹோர்முஸ் நீரிணையை முழுமையாக மூட ஈரான் திட்டமிட்டுள்ளது. ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பாப் அல்–மந்தப் கடல் எல்லையிலும் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் தடைகள் தீவிரப்படுத்தப்படும். லெபனானில் இருந்து இஸ்ரேலியப் படைகள் முழுமையாக வெளியேற வேண்டும் என்று ஈரான் நிபந்தனை விதித்துள்ளது.

## தெலுங்கானாவின் வளர்ச்சிப் பயணத்திற்கு முழு ஒத்துழைப்பு; பிரதமர் மோடி உறுதி!

புதுடில்லி, ஜூன். 02–

வளர்ச்சியடைந்த இந்தியா எனும் நமது கனவை நனவாக்க, தெலுங்கானாவின் வளர்ச்சிப் பயணத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்க மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என பிரதமர் மோடி உறுதி அளித்துள்ளார்.



தெலுங்கானா மாநிலம் உருவான தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை: தெலுங்கானா மக்களுக்கு எனது உளமார்ந்த நல்வாழ்த்துகள். தெலுங்கானா மக்கள் தங்கள் படைப்பாற்றலுக்கும், வணிகத் திறமைக்கும் பெயர் பெற்றவர்கள் ஆவர். இம்மாநிலம், துணிச்சல், உறுதிப்பாடு மற்றும் போராட்ட உணர்வின் அடையாளங்களாகத் திகழும் ஒரு மகத்தான வரலாற்றையும், புகழ்பெற்ற கலாசாரத்தையும் கொண்டுள்ளது. வளர்ச்சியடைந்த இந்தியா எனும் நமது கனவை நனவாக்க, தெலுங்கானாவின் வளர்ச்சிப் பயணத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்க மத்திய அரசு உறுதியுடன் உள்ளது. தெலுங்கானா மாநில மக்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் வெற்றியைப் பெற வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

**12 ஆண்டுகள் நிறைவு**

கடந்த 2014ம் ஆண்டு ஜூன் 2ம் தேதி தெலுங்கானா மாநிலம் ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, அதிகாரப்பூர்வமாக தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது. இன்றுடன் 12 ஆண்டுகள் நிறைவு பெற்றது. சந்திரசேகர் ராவ் தெலுங்கானாவின் முதல் முதல்வராக பதவியேற்றார். தற்போது தெலுங்கானாவின் முதல்வராக ரேவந்த் ரெட்டி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் வி.மோகனா!



டெல்லி, ஜூன். 02–

உச்ச நீதிமன்ற நீதிபதியாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் வி.மோகனா பதவியேற்றார். அவர் உச்ச நீதிமன்றத்தின் 12வது பெண் நீதிபதியாகப் பதிவாகியுள்ளார்.

மத்திய அரசு 5 புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தை ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து அவர் பதவியேற்றார்.

## ஜூன் 8: இந்தியா கூட்டணி முக்கிய ஆலோசனை!

புதுடெல்லி, ஜூன். 02–

டெல்லியில் ஜூன் 8 அன்று INDIA கூட்டணி கட்சிகளின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கூட்டணியின் எதிர்கால செயல்திட்டம், எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. பல முக்கிய எதிர்க்கட்சி தலைவர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

இதில் தமிழக முதல்வர் விஜய்யை பங்கேற்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன.








தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், மாநிலங்களவை உறுப்பினர் ப. சிதம்பரம் மற்றும் தென்னிந்திய பிராந்தியங்களுக்கான ராணுவத்தளபதி (Dakshin Bharat Area, ABSM General Officer Commanding) லெப்டினன்ட் ஜெனரல் வி. ஸ்ரீஹரி ஆகியோர் சந்தித்துப் பேசினார்.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு மீண்டும் தொடக்கம்!

## ஆகஸ்ட் 1-30 வரை தமிழகம் முழுவதும்

### 33 கேள்விகளுடன் முதன்முறையாக டிஜிட்டல் கணக்கெடுப்பு!!

சென்னை, ஜூன். 02–

கொரோனா பெருந்தொற்றால் தள்ளிவைக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி, தமிழகத்தில் வரும் ஆகஸ்ட் 1 முதல் 30 வரை முதன்முறையாக 33 கேள்விகளுடன் டிஜிட்டல் முறையில் நடைபெறவுள்ளது.

வரும் ஆகஸ்ட் 1ஆம் தேதி தொடங்கும் இந்த விவரச் சேகரிப்புப் பணிகளானது, அதே மாதம் 30ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இப்பணிகளில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெருமளவில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அவர்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, பொது மக்களின் வாழ்வாதாரம் மற்றும் குடும்ப பின்னணி தொடர்பான பல்வேறு விவரங்களைத் துல்லியமாகச் சேகரிக்கவுள்ளனர். இந்த கணக்கெடுப்பின் போது ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் ஒட்டுமொத்தமாக 33 முக்கியக் கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்கான பதில்கள் டிஜிட்டல் சாதனங்கள் மூலம் உடனுக்குடன் பதிவு செய்யப்படவுள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியோடு மிகத் துல்லியமாகவும் வேகமாகவும் நடத்தப்படவுள்ள இந்த புதிய டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கு, பொதுமக்கள் அனைவரும் தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, தங்களைப் பற்றிய சரியான விவரங்களைத் தெரிவிக்குமாறு அரசு தரப்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.




## தமிழக அமைச்சரவையின் பதவி மூப்பு பட்டியல் வெளியீடு: முதல்வர் விஜய் உள்பட 35 பேரின் வரிசை விவரம்!

சென்னை, ஜூன். 02–

தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முதல்–அமைச்சர் விஜய் தலைமையிலான அமைச்சரவையின் அதிகாரப்பூர்வ பதவி மூப்புப் பட்டியலை (Seniority List) தமிழக அரசின் பொதுத்துறை வெளியிட்டுள்ளது.



தற்போது தமிழக அமைச்சரவையில் முதல்–அமைச்சர் விஜய் உள்பட மொத்தம் 35 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்களுக்கான வரிசைப் பட்டியலைத் துறை வாரியாகப் பொதுத்துறை நேற்று முறைப்படி அறிவித்துள்ளது.

அமைச்சரவையின் அதிகாரப்பூர்வ பதவி மூப்பு வரிசைப் பட்டியல் இதோ:

முதல்–அமைச்சர் விஜய் பொது நிர்வாகம், உள்விருதுகள், காவல் மற்றும் உள்துறை உள்ளிட்ட முக்கியத் துறைகள்.

ஆனந்த் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர்.

ஆதவ் அர்ஜுனா பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்.

அருண்ராஜ் சுகாதாரம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்.

செங்கோட்டையன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்.

வெங்கடரமணன் உணவு மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்.

நிர்மல்குமார் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர்.

ராஜ்மோகன் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

பிரபு இயற்கை வளத்துறை அமைச்சர்.

கீர்த்தனா தொழில்துறை அமைச்சர்.

விஸ்வநாதன் உயர்கல்வித்துறை அமைச்சர்.

ராஜேஷ்குமார் சுற்றுலாத்துறை அமைச்சர்.

ஷாஜஹான் சிறுபான்மை நலத்துறை அமைச்சர்.

வன்னியரசு சமூக நீதித்துறை அமைச்சர்.

விஜய் தமிழன் பார்த்திபன் போக்குவரத்து துறை அமைச்சர்.

ராஜ்குமார் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர்.

சம்பத்குமார் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

விஜய் பாலாஜி கைத்தறி, ஜவுளி மற்றும் காதித்துறை அமைச்சர்.

விக்னேஷ் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்.

தென்னரசு வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்.

முகமது பர்வேஸ் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்.

கோவிந்தராஜ் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

ஜெகதீஸ்வரி சமூகநலன் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத்துறை அமைச்சர்.

வினோத் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்.

விஜயலட்சுமி பால் மற்றும் பால்வளத்துறை அமைச்சர்.

சரத்குமார் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.

ரமேஷ் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்.

மதன் ராஜா குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்.

மரிய வில்சன் நிதி, திட்டம் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர்.

ஸ்ரீநாத் மீன்வளங்கள் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர்.

கமலி கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்.

குமார் செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்.

ரஞ்சித்குமார் வனத்துறை அமைச்சர்.

லோகேஷ் தமிழ் செல்வன் வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.

ராஜீவ் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்.

தமிழக அரசின் இந்த அதிகாரப்பூர்வ பதவி மூப்புப் பட்டியலின்படி, அரசு விழாக்களின் போது அமைச்சர்களுக்கான அமர்வு வரிசை, மரபுச் சடங்குகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவை முறைப்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 02.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 19-ம் தேதி

# AI என்பது வெறும் பில்டப் தான்!




ஐடி துறையை பொறுத்தவரையில் எந்த பக்கம் திரும்பினாலும் ஒரே ஒரு பேச்சு தான் முதன்மையாக இருக்கிறது. அதுதான் ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் என்று சொல்லப்படுகிற AI தொழில்நுட்பம். இந்தத் தொழில்நுட்பம் பல நன்மைகளையும் செய்துள்ளது. அதே நேரத்தில் சில நிறுவனங்கள் AI ஏஜெண்ட்களை வைத்துக்கொண்டு அங்கு பணிபுரியும் ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யத் தொடங்கியுள்ளன. சில நாட்களுக்கு முன்பு இந்தியாவின் முன்னணி IT நிறுவனங்கள் AI தொழில்நுட்பத்தைக் காரணம் காட்டி கொத்து கொத்தாக ஊழியர்களை வீட்டிற்கு அனுப்பியது. ஆனால் உண்மையிலேயே நிறுவனங்கள் பொருளாதார ரீதியாக மந்தநிலையைச் சந்தித்து வருகின்றன. அதனால் தான் இந்த பணி நீக்கம் நடைபெறுகிறது. இதற்கெல்லாம் பலிகொடாவாக AI டெக்னாலஜியை நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன

அதற்கு அடுத்தபடியாக தற்போது ,AI தொழில்நுட்பம் வளரும் என்ற நம்பிக்கையில் முதலீட்டாளர்கள் ஒரு நிறுவனத்தின் மதிப்பை விட சுமார் 10 மடங்கு அதிகமாக பணம் கொடுத்து அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கி வருகின்றனர். ஆனால் அப்படி எகிறும் பங்குகளின் விலை உடனே சரியவும் வாய்ப்பிருக்கிறது.

அதில் நிறுவனங்களின் "ப்ரைஸ் டு சேல்ஸ் ரேஷியோ" எப்படி அதிகரித்துள்ளது அதற்கு உதாரணமாக, என்வீடியா, ஆப்பிள், ஆல்பபெட், மைக்ரோசாப்ட், மெட்டா மற்றும் மைக்ரான் டெக்னாலஜி போன்ற நிறுவனங்கள் தங்கள் வருடாந்திர வருமானத்தை விட அதிகமான விலையில் பங்குகளை வர்த்தகம் செய்து வருகின்றன

ப்ரைஸ் டு சேல்ஸ் ரேஷியோ என்வீடியாவுக்கு 20 மடங்காகவும், ஆப்பிளுக்கு 10 மடங்காகவும், அல்பாபெட்க்கு 11 மடங்காகவும், மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு 10 மடங்காகவும், மெட்டா நிறுவனத்திற்கு 7.5 மடங்காகவும், மைக்ரான் நிறுவனத்திற்கு 19 மடங்காகவும் அதிகரித்துள்ளது இந்நிறுவனங்கள் பெரும் வருவாயை விட சந்தையில் இவர்களுடைய பங்குகள் அதிக விலையில் வர்த்தகம்செய்கின்றன.

.1990–களில் இன்டர்நெட் என்ற புதிய தொழில்நுட்பம் உலகிற்கு அறிமுகமாகி வேகமாக வளர்ந்து வந்தது. இதனால் இன்டர்நெட் சேவை உலகத்தையே மாற்றப் போகிறது என்று நினைத்துக் கொண்டு முதலீட்டாளர்கள் பணத்தை அதிக அளவில் முதலீடு செய்தனர். அப்போது ஒரு இணைய நிறுவனத்தின் பெயருக்கு பின்னால் டாட் காம் என்ற பெயர் இருந்தாலே போதும். உடனே அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கி குவித்தனர். இதனால் அந்த நிறுவனங்களின் பங்குகளும் அப்போது பயங்கரமாக எகிறியது. அதன் பிறகு ஒரு சில மாதங்களில் அந்தந்த நிறுவனங்களின் உண்மையான வருவாய் வந்த தொடங்கியது. இதனால் 2000 தொடக்கத்தில் டாட் காம் நிறுவனங்களிடம் இருந்த பணமெல்லாம் தீர்ந்து போய் முதலீடுகள் கிடைக்காமல் போனது. இதனால் பல நிறுவனங்கள் திவால் ஆகின. ஒரே ஆண்டில் பல கோடிகள் நஷ்டம் ஏற்பட்டது. அப்போது பங்குச்சந்தையில் பயங்கர வீழ்ச்சி ஏற்பட்டது. இதுவே டாட் காம் கிராஷ் என அழைக்கப்பட்டது.

. ஒரு நிறுவனத்தின் வருவாயை விட 10 மடங்கு அதிக விலையில் பங்குகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த பங்குகளை யாரோ ஒரு முதலீட்டாளர் வாங்குகிறார் என்றால், அடுத்த 10 வருடத்திற்கு அந்த நிறுவனம் தனக்கு வரும் வருமானம் முழுவதையும் கொடுத்தால் மட்டுமே அவருக்கு லாபம் கிடைக்கும். சம்பளம் மற்றும் பிற விஷயங்களுக்கும் செலவு செய்யாமல் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். அப்படி செய்ய முடியுமா? கண்டிப்பாக முடியாது அல்லவா? எனவே AI வளர்ச்சி அடையும் என்பதை நம்பி முதலீட்டாளர்கள் பங்குகளை கவனம் செலுத்துகின்றனர். ஆனால் இது மிகப்பெரிய மார்க்கெட் கிராஷ்க்கு வழிவகுக்கும். எனவே ஏஐ மோகத்தால் பலரும் விலை அதிகரிப்பிலும் பங்குகளை வாங்கி வருகின்றனர் அப்படி வாங்கும் பங்குகள் திடீரென சரியும்போது மிகப் பெரிய மார்க்கெட் கிராஷ் ஏற்பட்டுவிடும். நிறுவனங்களின் லாபம் குறையும் போது முதலீட்டாளர்கள் அவற்றை விற்க ஆரம்பிப்பார்கள். அப்போது விலையும் கடகடவென சரிந்து இது போன்ற பிரச்சனை ஏற்படும்.

எளிமையாக சொல்ல வேண்டுமானால் AI என்பது இனிவரும் காலத்தில் ஒரு சில அற்புதங்களை கண்டிப்பாக செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதையே வைத்து நிறுவனங்களின் பங்குகள் அதிகரிப்பது மிகப்பெரிய வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன தெரியுமா? ஒரு கம்பெனியின் பங்குகளை வாங்குவதற்கு முன்பு அதன் உண்மையான லாபம் மற்றும் வருடாந்திர வருமானம் எவ்வளவு என்பதை எல்லாம் ஆராய்ந்து செயல்பட்டால் சந்தை வீழ்ச்சியிலும் தப்பித்துக் கொள்ள முடியும்.

# சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!



வாணியம்பாடி, ஜூன்.02–

திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளராக Dr.S.பசுபதி MD அவர்கள் பொறுப்பேற்றதையடுத்து ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் மற்றும் ஆலங்காயம் பேரூராட்சி கழகத்தின் சார்பில் 01.06.2026அன்று ஆலங்காயம் பேரூராட்சி அலுவலகம் எதிரில் உள்ள புரட்சித்தலைவர் MGR அவர்களின் திருவுருவ சிலைக்கும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கும் மலர்மாலை அணிவித்து இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. மேற்கண்ட நிகழ்ச்சியில் கோவி. சம்பத்குமார் Ex.MLA அவர்களும் கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.உடன் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி மற்றும் கிளைக்கழக நிர்வாகிகளும் சார்பு அணி நிர்வாகிகளும் முன்னாள் மற்றும் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளும், கூட்டுறவு சங்க பிரதிநிதிகளும், பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



2026–2027 ஆம் கல்வி ஆண்டில் மாணவியர் சேர்க்கைக்கான கலந்தாய்வு 01.06.2026 நேற்று நடைபெற்றது. சிறப்பு ஒதுக்கீட்டிற்கான மாணவியர் சேர்க்கையினை கல்லூரியின் தாளாளர் / திருக்கோயிலின் இணைஆணையர் அவர்கள் மற்றும் கல்லூரியின் செயலர் / திருக்கோயிலின் துணைஆணையர் அவர்களும் துவக்கி வைத்தார்கள் . கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் உடன் இருந்தனர்

# பயிர்க்கடன்: தொடரும் விவசாயிகள் போராட்டம்!

சென்னை, ஜூன். 02–

தமிழகத்தில் கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் முழுதையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.



மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியை, தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுதும் பல்வேறு மாவட்ட தலை நகரங்களில், விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணியாக வந்த விவசாயிகள், தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் முன், போராட்டம் நடத்த முயன்றனர். அவர்களை போலீசார் கைது செய்ய முயன்ற போது, விவசாய சங்க தலைவர் பழனியப்பன் உள்ளிட்டோருக்கும், போலீசாருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீசார் ஒருமையில் பேசியதால், விவசாயிகள் தர்ணாவில் ஈடுபட்டனர். காவிரி டெல்டா விவசாயிகள் பாதுகாப்பு சங்க விவசாயிகள், மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகம் முன், முட்டி போட்டு நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.வேலூார் கலெக்டர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் நடந்தது. பட்டை நாமம் தரித்தபடியும், வாயில் கருப்பு துணியால் மூடியபடியும், தமிழக அரசுக்கு எதிராக விவசாயிகள் முழக்கங்களை எழுப்பினர். நாகை கலெக்டர் அலுவலகம் வாயிலில், மாலை அணிந்து சடலம் போல் படுத்து, விவசாயிகள் வாயில் வாய்க்கரிசி போட்டு, ஒப்பாரி வைத்தும், மேளம் அடித்தும் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

விழுப்புரம் நகராட்சி திடலில், விவசாயிகள், கையில் கரும்பை ஏந்தியும், பட்டை நாமம் போட்டுக்கொண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**'பொய் வாக்குறுதிகள் அளித்து பச்சை துரோகம்'**

தமிழக வெற்றிக் கழக தேர்தல் அறிக்கையில், 5 ஏக்கருக்குள் நிலம் வைத்துள்ள விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்; 5 ஏக்கருக்கு மேல் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடன், 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என, வாக்குறுதி அளிக்கப்பட்டது.

வாக்குறுதிப்படி, இந்த அரசின் முதல் பட்ஜெட் அறிக்கையி லேயே, விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யும் அறிவிப்பை வெளியிட வேண்டும். பொய் வாக்குறுதிகளை வழங்கி, விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டி, இப்போது அரைகுறையாக எந்த விவசாயிக்கும் பயனளிக்காத வகையில், பகுதி பயிர்க்கடன் தள்ளுபடி செய்திருப்பது, விவசாயிகளுக்கு இழைக்கப்படும் பச்சை துரோகம்.

– தங்கம் தென்னரசு, தி.மு.க., முன்னாள் அமைச்சர்

# ஆசிரியர்கள் நியமனம்: தமிழக அரசின் குட் நியூஸ்!

சென்னை, ஜூன். 02–

தமிழகத்தில் ஜூன் 4ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில், தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்க தமிழக அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மாதம் ரூ.18,000 சம்பளத்தில் தற்காலிக ஆசிரியர்களை நியமிக்க தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது.

தமிழக அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என தொடர் கோரிக்கைகள் எழுந்த வண்ணம் இருந்த நிலையில், தமிழக அரசு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது, தற்காலிக ஆசிரியர்களை நியமிக்க உத்தரவிட்டுள்ளது. இதற்கு எப்படி விண்ணப்பிக்கலாம் என்பது குறித்த முழு விவரத்தை இந்த தொகுப்பில் பார்க்கலாம்.




ஜூன் 4ஆம் தேதி பள்ளிகள் திறப்பு

தமிழகத்தில் பள்ளி மாணவர்கள் தற்போது கோடை விடுமுறையில் உள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் கோடை விடுமுறை தொடங்கியது. ஜூன் 1ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படுவதாக பள்ளிக்ல்வித்துறை அறிவித்து இருந்தது. அதற்கான ஏற்பாடுகளையும் பள்ளிக்கல்வித்துறை செய்து வருகிறது. இதற்கிடையில், வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், பள்ளிகள் திறப்பை தள்ளி வைத்தது.

டிஎன்பிஎஸ்சி ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு: ஆன்லைன் விண்ணப்பிப்பது எப்படி?

அதாவது, ஜூன் 4ஆம் தேதி தமிழகத்தில் அனைத்து வகுப்புகளுக்கும் பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. இதனை அடுத்து, புத்தகம், சீருடை உள்ளிட்டவற்றை அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. பள்ளிகள் திறக்க இன்னும் 3 நாட்களே உள்ளன. இதற்கிடையில், பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாக தொடர் குற்றச்சாட்டுகள் எழுந்தது.

ஆசிரியர்கள் காலிப் பணியிடங்கள்

2026–27ஆம் கல்வியாண்டு தொடங்கும் நிலையில், பள்ளிகளில் ஆசிரியர்கள் முழுமையாக இருக்க வேண்டும். காலிப் பணியிடங்கள் இல்லாதவாறு பார்த்துக கொள்ள வேண்டும். காலிப் பணியிடங்கள் இருந்தால் தற்காலிக ஆசிரியர்கள் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. இந்த பணிகள் ஒரு மாதத்திற்கு முன்பு தொடங்கப்பட்டு இருக்க வேண்டும் ஆனால், நடப்பாண்டு தாமதமாக தற்காலிக ஆசிரியர்கள் நிரப்ப இருக்கின்றனர். பல்வேறு தரப்பினரும் ஆசிரியர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என தொடர் கோரிக்கைகள் இருந்து வருகிறது. இந்த நிலையில், தமிழக அரசு பள்ளிகளில் தற்காலிக பணியிடங்களை நிரப்ப உள்ளதாக அறிவித்துள்ளது.

| வ.எண் | பள்ளிகள் | பணியிடங்கள் | கல்வித்தகுதி | வருமானம் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை தொடக்கப் பள்ளிகள் | 101 | C.P.Ed/ B.P.Ed, | ரூ.18,000 |
| 2. | சென்னை நடுநிலைப் பள்ளிகள் | 29 | B.P.Ed/ M.P.Ed | ரூ.20,000 |
| 3. | சென்னை உயிர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் | 50 | B.P.Ed/M.P.Ed | ரூ.25,000 |

ரூ.18,000 சம்பளத்தில் தற்காலிக ஆசிரியர்கள் நியமனம்

தமிழகம் முழுவதும் உள்ள தற்காலிக ஆசிரியர்களை நியமிக்க உத்தரவிட்டுள்ளது. குறிப்பாக, சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மை குழு (SMC) மூலம் தற்காலிக அடிப்படையில் ஜூன் முதல் மார்ச் வரை 10 மாதங்களுக்கு மட்டும் உடற்கல்வி ஆசிரியர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும் படிக்க: பள்ளி வாயில்களில் கட்டண விவரங்களை வைக்க உத்தரவு: மாநில தகவல் ஆணையம் அதிரடி

அதன்படி, சென்னை தொடக்கப் பள்ளியில் 101 பணியிடங்கள், சென்னை நடுநிலைப் பள்ளியில் 29 காலிப் பணியிடங்கள், சென்னை உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியில் 50 காலிப் பணியிடங்கள் மொத்தம் 180 பணியிடங்களில் தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

கல்வித்தகுதியை பொறுத்தவரை, தொடக்கப்பள்யியில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் C.P.Ed/B.P.Ed, சென்னை நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் B.P.Ed/ M.P.Ed படித்திருக்க வேண்டும். சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் பணிக்கு விண்ணப்பிக்க B.P.Ed/M.P.Ed படித்திருக்க வேண்டும்.

மாத சம்பளத்தை பொறுத்தவரை, சென்னை தொடக்கப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியர்களாக தேர்ச்சி பெறுபவர்களுக்கு மாத சம்பளமாக ரூ.18,000, சென்னை நடுநிலைப் பள்ளிகளில் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு ரூ.20,000, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு ரூ.25,000 சம்பளம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பள்ளியில் தலைமை ஆசிரியர்கள் தகுதியான நபர்களை தேர்வு செய்து அவர்களின் விவரங்களுடன் கூடிய பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலரிடம் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.



# வறுமைக்கு குட்பை சொல்லும் பொருள்!




வாழ்க்கையில் நீங்கள் எவ்வளவு கடினமாக உழைத்தாலும், உங்கள் கைகளில் பணம் தங்குவதில்லையா? வீட்டில் எப்போதும் ஏதோ ஒருவிதமான மன அமைதியின்மையையும், குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே சச்சரவுகளையும் நீங்கள் சந்திக்கிறீர்களா? இதற்கெல்லாம் காரணம் உங்கள் வீட்டில் நிலவும் எதிர்மறை ஆற்றலோ அல்லது தீய சக்தியோதான் இருக்கக்கூடும். நம் வீட்டில் உள்ள சில எளிய பொருட்களைக் கொண்டே இத்தகைய பெரிய பிரச்சனைகளை நாம் எளிதாகக் கண்டறிந்து சரிசெய்ய முடியும் என்று ஆன்மீக நிபுணர்கள் கூறுகின்றனர்..

அத்தகைய பொருட்களில், 'படிகாரம்' (Alum) மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். படிகாரத்தை நீரைச் சுத்திகரிக்கப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், வீட்டில் நிலவும் வறுமையை விரட்டவும், மகாலட்சுமியின் அருளைப் பெறவும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இப்போது காண்போம். பொதுவாக, வணிக நிறுவனங்களிலும், வீடுகளின் வாசல்களிலும் கருப்புத் துணியில் கட்டப்பட்ட ஒரு படிகாரத் துண்டை நாம் காண முடியும். இதற்குப் பின்னால் ஒரு பெரிய ஆன்மீக ரகசியம் மறைந்துள்ளது.

சுற்றுப்புறத்தில் உள்ள எதிர்மறை ஆற்றலைத் தனக்குள் ஈர்த்துக்கொள்ளும் அற்புதமான ஆற்றல் படிகாரத்திற்கு உண்டு. உங்கள் வீட்டில் நிதி நெருக்கடிகள் நிலவி வந்தால், ஒரு சிவப்பு நிறப் பட்டுத் துணியை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் ஒரு சிறிய படிகாரத் துண்டை வைத்து, முடிச்சாகக் கட்டிக்கொள்ளுங்கள். இந்த முடிச்சை உங்கள் வீட்டின் பிரதான வாசலுக்கு உள்ளே அல்லது நீங்கள் பணம் சேமித்து வைக்கும் பெட்டியில் வைத்துவிடுங்கள். இவ்வாறு செய்வதன் மூலம், நீங்கள் மகாலட்சுமியின் அருளைப் பெறுவீர்கள்.. தேவையற்ற செலவுகள் குறைந்து, செல்வம் பெருகும்.

வணிகத்தில் நஷ்டத்தைச் சந்திப்பவர்களும் படிகாரத்தைப் பயன்படுத்தி நல்ல பலன்களைப் பெறலாம். உங்கள் அலுவலகம் அல்லது கடையின் பிரதான வாசலில், ஒரு கருப்பு நூலில் படிகாரத் துண்டை இணைத்துக் கட்டித் தொங்கவிடுங்கள். இவ்வாறு செய்வதால், எதிர்மறை ஆற்றல்கள் உங்கள் வணிக வளாகத்திற்குள் நுழையாது. வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்; தேக்கமடைந்திருந்த பணிகள் மீண்டும் வேகம் பிடிக்கும்.

வீட்டில் உள்ள சிறு குழந்தைகளோ அல்லது பெரியவர்களோ 'கண் திருஷ்டி' (தீய பார்வை) காரணமாக அடிக்கடி உடல்நலக்குறைவுக்கு ஆளாகி வந்தால், அதற்குப் படிகாரம் ஒரு சிறந்த பரிகாரமாகும். சனிக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமையன்று, ஒரு படிகாரத் துண்டை எடுத்துக்கொண்டு, கண் திருஷ்டியால் பாதிக்கப்பட்ட நபரைச் சுற்றி மூன்று முறை வலம் வாருங்கள்.

பின்னர் அந்தப் படிகாரத் துண்டை நெருப்பில் போட்டுவிடலாம் அல்லது யாரும் மிதிக்காத ஒரு இடத்தில் வீசிவிடலாம். இவ்வாறு செய்வதால், அந்தத் திருஷ்டிப் பாதிப்பு சில கணங்களிலேயே விலகிவிடும். இரவில் உங்களுக்குத் துர்சொப்பனங்கள் (கெட்ட கனவுகள்) தோன்றுகின்றனவா? அப்படியென்றால், உங்கள் படுக்கையறையில் உள்ள கட்டிலுக்கு அடியில், ஒரு சிறிய கிண்ணத்தில் படிகாரத் துண்டை வைத்துக்கொள்ளுங்கள். இது உங்களுக்கு மன அமைதியை அளித்து, நிம்மதியாக உறங்க உதவும்.

இறுதியாக, வீட்டைத் துடைக்கப் பயன்படுத்தும் நீரில் சிறிதளவு படிகாரப் பொடியைக் கலந்து, வாரத்திற்கு ஒருமுறை வீட்டை முழுமையாகத் துடைத்துச் சுத்தம் செய்வதன் மூலம், உங்கள் வீடு எப்போதும் ஒரு கோவிலைப் போலவே அமைதி நிறைந்ததாகத் திகழும். எனினும், எதிர்மறை ஆற்றலை உறிஞ்சிக்கொண்ட இந்தப் படிகக் கற்களை மாதம் ஒருமுறை மாற்றுவது சிறந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இயற்கையன்னை நமக்கு வழங்கியிருக்கும் இந்தச் சிறிய பரிகாரங்களை நம்பிக்கையுடன் பின்பற்றி, உங்கள் வாழ்வில் உள்ள பணம் தொடர்பான சிக்கல்களில் இருந்து விடுபடுங்கள்.



பழனி பழனி ஆண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரியில் மாணவர் சேர்க்கையை கோவில் துணை ஆணையர் வெங்கடேசன் தொடங்கி வைத்தார் அருகினில் முதல்வர் ரவிசங்கர் முனைவர் திருப்பதி முனைவர் மயில்சாமி தேசிய மாணவர் படை பாக்கியராஜ் ஆகியோர் உள்ளனர்.

மதுரை மணி



நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

## மீனுடன் சிக்கன் சாப்பிடலாமா..?




திருமணங்களில் சிக்கன் பிரியாணியுடன் மீன் வறுவல் அல்லது ஹோட்டலில் சிக்கன் கபாபுடன் பிரான் மசாலா ஆர்டர் செய்யும்போது, பெரும்பாலான மக்களின் மனதில் ஒரு கேள்வி எழுகிறது: சிக்கனுடன் மீன் சாப்பிடலாமா? சிலர் இது ஒரு முரண்பாடான உணவு என்று அஞ்சுகிறார்கள், மற்றவர்களோ, இரண்டுமே புரதங்கள் என்பதால் எந்தப் பிரச்சனையும் இல்லை என்கிறார்கள். அப்படியானால், இது ஒரு அறிவியல் உண்மையா, அல்லது பல ஆண்டுகளாக இருந்து வரும் ஒரு மூடநம்பிக்கையா? இதுகுறித்து விரிவாக பார்க்கலாம்..

**ஆயுர்வேதம் என்ன சொல்கிறது?**

ஆயுர்வேதத்தில், இது ஒரு முரண்பாடான உணவு என்று அழைக்கப்படுகிறது. கோழிக்கறி சூடானது, கனமானது மற்றும் செரிமானம் ஆக நீண்ட நேரம் எடுக்கும். மீனும் சூடானது ஆனால் கொழுப்பு நிறைந்தது மற்றும் விரைவாக செரிமானம் ஆகும். இவ்விரண்டின் ரசம், திரவம் மற்றும் விபாகம் வேறுபடும்போது, வயிற்றுத் தீ குழப்பமடைந்து அஜீரணம், வாயு, வயிறு உப்புசம், தோல் ஒவ்வாமை அல்லது விஷம் கூட ஏற்படலாம் என்று ஆயுர்வேத நூல்கள் கூறுகின்றன. குறிப்பாக, மீனுடன் பால், தயிர் அல்லது தேன் சேர்ப்பதைப் போலவே, மீனுடன் கோழிக்கறியைச் சேர்க்கக்கூடாது என்பதே பாரம்பரிய அறிவுறையாகும்.

ஆனால், கோழியுடன் மீன் சாப்பிடுவது பொதுவாகப் பாதுகாப்பானது என்றும் இதுவரை, இந்தக் கலவை நச்சுத்தன்மை வாய்ந்தது அல்லது தீங்கு விளைவிக்கும் என்பதை நிரூபிக்கும் எந்த அறிவியல் ஆய்வும் இல்லை என்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர்... கோழியில் உயர்தர புரதம், பி வைட்டமின்கள், செலினியம் மற்றும் பாஸ்பரஸ் ஆகியவை உள்ளன. மீனில் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், வைட்டமின் டி, அயோடின் மற்றும் செலினியம் ஆகியவை உள்ளன. இரண்டையும் ஒன்றாகச் சாப்பிடுவது, தசை வளர்ச்சிக்கு உதவக்கூடிய பல்வேறு அமினோ அமிலங்களை வழங்க முடியும். பிரச்சனை உணவின் கலவையில் இல்லை, மாறாக அதன் அளவு மற்றும் தரத்தில்தான் உள்ளது.

**எப்போது இது ஒரு பிரச்சனையாக மாறும்?**

ஒரே வேளை உணவில் 300 கிராமுக்கு மேல் விலங்குப் புரதத்தைச் சாப்பிடுவது செரிமான அமைப்பில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இது வயிற்றுப் பாரம், வாயு மற்றும் குமட்டலை ஏற்படுத்தும். அதிக யூரிக் அமிலம் உள்ளவர்கள், சிறுநீரகப் பிரச்சனைகள் உள்ளவர்கள் மற்றும் கீல்வாத நோயாளிகள் இரண்டு இறைச்சிகளையும் ஒன்றாகச் சாப்பிட்டால் அதிக வலியை உணரக்கூடும்.

மேலும், கோழி மற்றும் மீன் வெவ்வேறு வெப்பநிலைகளில் சமைக்கப்பட வேண்டும். கோழியை 75 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையிலும், மீனை 63 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையிலும் சமைக்க வேண்டும். ஒரே எண்ணெயில் சமைத்தால், குறுக்கு மாசுபடுதல் மற்றும் பாக்டீரியா பரவும் அபாயம் உள்ளது. கெட்டுப்போன மீன் அல்லது நுண்ணுயிர் எதிர்ப்பிகளால் (antibiotics) பதப்படுத்தப்பட்ட கோழியைப் பயன்படுத்தினால், ஒவ்வாமை (allergy) ஏற்படும் அபாயம் அதிகமாக உள்ளது.

**சரியாக எப்படிச் சாப்பிடுவது?**

கோழியையும் மீனையும் தனித்தனி பாத்திரங்களில், தனித்தனி கத்தி மற்றும் வெட்டும் பலகையைப் பயன்படுத்தி சுத்தம் செய்யவும். இரண்டையும் அளவோடு எடுத்துக்கொள்ளுங்கள், மொத்த புரதத்தின் அளவு 150 முதல் 200 கிராமுக்கு மிகாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். மேலும், நார்ச்சத்து நிறைந்த சாலட், கீரைகள், எலுமிச்சை சாறு அல்லது மோர் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளுங்கள். இது செரிமானத்தை எளிதாக்கும். உணவுக்குப் பிறகு வெதுவெதுப்பான நீரைக் குடியுங்கள், உடனடியாகப் படுத்துக்கொள்ள வேண்டாம். முதல் முறை முயற்சிக்கும்போது, சிறிதளவு சாப்பிட்டு, உங்கள் உடல் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறது என்பதைக் கவனியுங்கள்.

**யார் தவிர்க்க வேண்டும்?**

அடிக்கடி அஜீரணம், எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி (IBS), அமிலத்தன்மை உள்ளவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிறு குழந்தைகள் ஒரே உணவில் கோழி மற்றும் மீன் சேர்ப்பதைத் தவிர்ப்பது நல்லது. ஒவ்வாமை வரலாறு உள்ளவர்கள் முதலில் மருத்துவரை அணுக வேண்டும்.

மொத்தத்தில், கோழியுடன் மீன் சாப்பிடுவது பாவமும் அல்ல, விஷமும் அல்ல. இது உங்கள் செரிமான சக்தி, அளவு மற்றும் சமைக்கும் முறையைப் பொறுத்தது. ஆயுர்வேதம் எச்சரிக்கிறது, அறிவியல் அனுமதிக்கிறது. நீங்கள் ஆரோக்கியமாக இருந்து, புதிய இறைச்சியைச் சரியாகச் சமைத்து, அளவோடு சாப்பிட்டால், எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் உங்கள் வயிறு கனமாகவோ அல்லது வாயுவாகவோ உணர்ந்தால், அந்த இணைப்பை நிறுத்துங்கள். உங்கள் உணவில் பன்முகத்தன்மை இருக்க வேண்டும், ஆனால் அதே சமயம் விவேகமும் இருக்க வேண்டும்.

# அண்ணாமலையின் அடுத்த அரசியல் அவதாரம்!

சென்னை, ஜூன். 02–

கர்நாடக மாநிலத்தில் இளம் ஐ.பி.எஸ். அதிகாரியாக, காக்கி உடையில் அதிரடி காட்டிய அண்ணாமலை, அந்தப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 2020–ம் ஆண்டு பா.ஜ.க.வில் இணைந்தார். தனது அதிரடி பேச்சால் இளைஞர்களை ஈர்த்த அவர், குறுகிய காலத்திலேயே தமிழக பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்பட்டார்.

2024–ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், தமிழகத்தில் பா.ஜ.க.வின் வாக்கு வங்கி 11 சதவீதம் என்ற அளவுக்கு உயர்ந்தது. ஆனால், திடீரென 2026 சட்டசபை தேர்தலுக்கு முன்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் பதவியில் இருந்து அண்ணாமாலை மாற்றப்பட்டார். இதற்கு அ.தி.மு.க. கொடுத்த அழுத்தம் தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

**பா.ஜ.க. வாக்கு சதவீதம் சரிவு**

என்றாலும், சட்டசபை தேர்தலில் களம் காண அண்ணாமலை ஆர்வமாக இருந்தார். கோவை வடக்கு அல்லது திருப்பூர் வடக்கு ஆகிய தொகுதிகளில் ஒன்றில் அவர் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 2 தொகுதிகளும் வழங்கப்படவில்லை. இதனால், கடும் அதிருப்தியில் அண்ணாமலை இருந்து வந்தார்.

சட்டசபை தேர்தலிலும் முழு வீச்சில் அவர் பிரசாரத்தில் ஈடுபடவில்லை. அ.தி.மு.க. கூட்டணியில் 27 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க. ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. வாக்கு சதவீதமும் 2 சதவீதமாக அதிரடியாக சரிந்தது.

**பா.ஜ.க. கொடியில்லாத கார்**

இந்த நிலையில், அண்ணாமலையின் ஆதரவாளர்கள் அவரை தனிக்கட்சி தொடங்கக் கோரி வலியுறுத்தி வந்தனர். அவரும் பதில் எதுவும் சொல்லாமல் அமைதி காத்து வந்தார். பா.ஜ.க. தலைமையும் அவரை சமரசம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தது.

இந்த நிலையில், கடந்த வாரம் பா.ஜ.க. அரசின் மும்மொழிக் கொள்கைக்கு திடீரென எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டு அண்ணாமலை பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதனால், பா.ஜ.க.வை விட்டு அண்ணாமலை வெளியேறப்போவது உறுதி என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது. இந்த நிலையில், நேற்று டெல்லி செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்த அண்ணாமலை, பா.ஜ.க. கொடியில்லாத காரில் வந்தார்.

**2 நாட்களில் ஏதோ நடக்கப்போகிறது?**

இதுகுறித்தும், புதிய கட்சி தொடங்கப்போவதாக வரும் தகவல் குறித்தும்நிருபர்கள் அண்ணாமலையிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், “2 நாட்கள் கழித்து அனைத்து கேள்விகளுக்கும் பதில் சொல்கிறேன். விரிவாக பேசலாம்” என்று கூறிச் சென்றார். அதாவது, நிருபர்கள் கேட்ட கேள்வியை அவர் மறுக்கவில்லை என்பதால், 2 நாட்களில் ஏதோ நடக்கப்போகிறது? என்பது மட்டும் தெரிகிறது.

டெல்லி சென்றுள்ள அண்ணாமலை, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபினை சந்தித்து பேசுவார் என தெரிகிறது. அதேபோல், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவையும் சந்தித்து பேச வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இதுவரை, யாரையும் அவர் நேரில் சந்திக்கவில்லை என்றாலும், டெல்லி பா.ஜ.க. தலைவர்கள், அண்ணாமலையை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சமாதானம் செய்து வருவதாக கூறப்படுகிறது.



**மக்கள் சக்தி இயக்கம்**

இந்த நிலையில், அண்ணாமலை புதிய முடிவுடனேயே டெல்லி சென்றுள்ளதாக அவருடைய ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். அதாவது, பா.ஜ.க.வின் அடிப்படை உறுப்பினரில் இருந்து அண்ணாமலை விலகி, இளைஞர்களை மையப்படுத்திய புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கப் போவதாக சொல்லப்படுகிறது. இதற்கான அறிவிப்பை நாளை மறுநாள் (ஜூன் 4) தனது பிறந்த நாளில் அண்ணாமலை வெளியிடுவார் என தெரிகிறது.

அண்ணாமலையின் சொந்த அமைப்பான ‘வீ தி லீடர்ஸ்’ உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி, ‘மக்கள் சக்தி இயக்கம்’ என்ற பெயரில் புதிய இளைஞர் இயக்கத்தை தொடங்க திட்டமிட்டுள்ளாராம். இது முதலில் சமூக இயக்கமாகத் தொடங்கப்பட்டு, பின்னர் அரசியல் கட்சியாக உருமாறும் என்று தெரிகிறது.

**அரசியல் வரலாற்றில் முதல் முறை**

தமிழக அரசியல் வரலாற்றில், ஒரு தேசியக் கட்சியின் மாநிலத் தலைவர், அந்தப் பதவியில் இருந்து விலகி, புதிய பிராந்திய இளைஞர் இயக்கத்தை தொடங்குவது இதுவே முதல் முறையாகும்.

விஜய்யின் அரசியல் வருகைக்குப் பிறகு, அண்ணாமலையின் ‘மக்கள் சக்தி இயக்கம்’ 2026–ம் ஆண்டுக்குப் பிந்தைய தமிழ்நாட்டு அரசியல் சமன்பாடுகளை முற்றிலும் மாற்றியமைக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

# வேலை வாய்ப்பு

## காரைக்குடி CECRI–யில் புதிய வேலைவாய்ப்பு 24 Project Assistant பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: சிஎஸ்ஐஆர்–மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR–CECRI), காரைக்குடி
அறிவிப்பு எண்: PS 05/2026, தேதி: 29.05.2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 24 முதன்மை திட்ட உதவியாளர், மூத்த திட்ட உதவியாளர், திட்ட உதவியாளர் II, திட்ட உதவியாளர் I மற்றும் திட்ட உதவியாளர் II பணியிடங்கள்
பணியிடத்தில்: காரைக்குடி
தொடங்கும் தேதி: 30.05.2026
கடைசி தேதி: 08.06.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.cecri.res.in/

# இராசிபுரம் பகுதியில் அதிகபாரம் ஏற்றிச் சென்ற சரக்கு வாகனங்கள் சிறைபிடிப்பு.



ராசிபுரம், ஜூன். 02–

இராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு M.பதுவைநாதன் அவர்களின் தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. A.செல்வகுமார் அவர்கள் இராசிபுரம் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் சிறப்பு வாகன தணிக்கை மேற்கொண்டு மொத்தம் 12 வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டது,

இச்சிறப்பு வாகன தணிக்கை மூலமாக அரசுக்கு சுமார் 3.80 லட்சம் ரூபாய் இணக்கக்கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இனிவரும் காலங்களில் இதுபோன்ற சிறப்பு வாகன தணிக்கை இராசிபுரம் பகுதிகளில் அடிக்கடி நடைபெறும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு M.பதுவைநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு: 66 சேவைகள் WhatsApp-ல்!

சென்னை, ஜூன். 02–

பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் மற்றும் அரசு சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசு ‘நம்ம அரசு நம்ம கையில்’ என்ற புதிய அதிநவீன வாட்ஸ்அப் சேவை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய திட்டத்தின் கீழ், தமிழக அரசின் 20 முக்கிய துறைகளைச் சேர்ந்த 66 வகையான அரசு சேவைகள் ஆன்லைன் தளம் வழியாக இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பொதுமக்கள் எங்கும் அலையாமல், இருந்த இடத்திலிருந்தே மிக எளிதான முறையில் தங்களுக்குத் தேவையான உதவிகளையும் சான்றிதழ்களையும் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வாட்ஸ்அப் சேவையைப் பயன்படுத்துவது எப்படி?**

இந்த அதிநவீன சேவையைப் பயன்படுத்த பொதுமக்கள் தங்களது மொபைல் போனில் 7845252525 என்ற அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் எண்ணைச் சேமித்துக் கொள்ள வேண்டும். பின்னர், அந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் செயலி மூலம் ‘வணக்கம்’ (Va–nakkam) அல்லது ‘ஹாய்’ (Hi) என்று குறுஞ்செய்தி (Message) அனுப்ப

செய்தி அனுப்பியவுடன், மொழியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆப்ஷன் தோன்றும். அதில் தமிழ் மொழியில் சேவைகளைப் பெற விரும்புவோர் ‘T’ என்றும், ஆங்கிலத்தில் சேவைகளைப் பெற விரும்புவோர் ‘E’




என்றும் பதிவிட வேண்டும். மொழியைத் தேர்வு செய்ததைத் தொடர்ந்து, எந்தத் துறையின் கீழ் உங்களுக்குச் சேவை தேவைப்படுகிறது என்பதை குறிப்பிட்டால், அதற்கான வழிகாட்டுதல்களும் சேவைகளும் உடனுக்குடன் உங்கள் வாட்ஸ்அப் திரைக்கே வந்துவிடும்.

**என்னென்ன சேவைகளைப் பெறலாம்?**

இந்த ‘நம்ம அரசு நம்ம கையில்’ திட்டத்தின் மூலம் பொதுமக்கள் முக்கியமாகப் பின்வரும் சேவைகளைப் பெற முடியும்:

*பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் (வகுப்பு சான்றிதழ்) மற்றும் இதர முக்கிய அரசுச் சான்றிதழ்களை எளிதாகப் பெறலாம்.

*மாதாந்திர மின் கட்டணம், உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து வரி, குடிநீர் வரி உள்ளிட்ட பல்வேறு பயன்பாட்டுக் கட்டணங்களை (Utility Bills) இந்த வாட்ஸ்அப் எண் மூலமாகவே பாதுகாப்பாகச் செலுத்த முடியும்.

*ஏற்கனவே அரசு சேவைகளுக்கு விண்ணப்பித்தவர்கள், தங்களது விண்ணப்பம் தற்பொழுது எந்த நிலையில் (Application Status) உள்ளது என்பதை உடனுக்குடன் இந்த எண்ணின் மூலம் கண்காணித்து அறிந்துகொள்ளலாம்.

பொதுமக்களின் நேரத்தையும் அலச்சலையும் மிச்சப்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த வாட்ஸ்அப் சேவையைப் பொதுமக்கள் அனைவரும் +917845252525 என்ற எண்ணைப் பயன்படுத்தி நன்மையடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# பழனியில் வாலிபர் விழிப்புணர்வு பயணம்!



பழனி ஜூன். 02–

கேரளா மாநிலம் கண்ணனூர் மாவட்டத்தைச் சேர்ந்த வர்சனிதி வயது 25 இவர் போதைப்பொருள் பயன்பாட்டை தடுக்க கோரி, கண்ணனூ ரிலிருந்து நேபாள நாட்டின் எவரெஸ்ட் சிகரம் வரை, தனது முன் சக்கரம் இல்லாத பின் சக்கரம் மட்டும் கொண்ட ஒற்றைச் சக்கர சைக்கிளில் பயணம் மேற்கொள்ள உள்ளார். அத ன்படி கடந்த சில நாட்களுக்கு முன்பு கண்ணனூரில் தனது ஒற்றைச் சக்கர சைக்கிளில் பயணத்தை தொடங்கினார். பழனிக்கு நேற்று வருகை புரிந்தார்.


முன்னதாக பழனிக்கு வந்த அவரை அரிமா சங்கத்தினர் மற்றும் இரயில் பயன்படுத்துவோர் சங்கத்தினர் வரவேற்றனர். இதில் சிவகுமார், எஸ்வி நாகேஸ்வரன், அரிமா சுந்தரம், பாலசுப்பிரமணியம், சீனிவாசன் பங்கேற்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

## சினிமா துளிகள்..!

### தென் கொரியா சுற்றுலாத்துறை தூதராக நடிகை பிரியங்கா மோகன் நியமனம்!



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வளம் வருபவர் பிரியங்கா மோகன். தமிழில் சிவகார்த்திகேயனின் டாக்டர் படம் மூலம் கவனம் ஈர்த்தார். தொடர்ந்து தனுஷின் கேப்டன் மில்லர் உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார்.

‘நித்தம் ஒரு வானம்’ படத்தின் இயக்குநர் ரா.கார்த்திக் இயக்கத்தில் பிரியங்கா மோகன் நடித்த ‘மேட் இன் கொரியா’ திரைப்படம் கடந்த மார்ச் 12–ம் தேதி நேரடியாக நெட்ப்ளிக்ஸ் ஒடிடியில் வெளியானது. பீல் குட் படமாக அமைந்த ‘மேட் இன் கொரியா’ ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனிடையே கடந்த ஏப்ரலில் மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்த தென் கொரிய அதிபருக்கு ஜனாதிபதி மாளிகையில் அளிக்கப்பட்ட விருந்தில், நடிகை பிரியங்கா மோகன் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு தென் கோரிய அதிபரை பிரியங்கா சந்தித்தார்.

இந்நிலையில், ‘மேட் இன் கொரியா’ படத்துக்கு அங்கீகாரம் கொடுக்கும் விதமாக, தென் கொரிய சுற்றுலாத்துறை கௌரவ தூதராக பிரியங்கா மோகனை நியமித்து அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. அவருக்கு ரசிகர்கள் பலரும் தங்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.



பழனியில் தமிழக வெற்றி கழகம் கட்சியினர், முதல்வர் விஜய்யின் உத்தரவின் பேரில் நீர் மோர் பந்தல் அமைத்து பொதுமக்களுக்கு வழங்கினர் இதில் பழனி சட்டமன்ற வேட்பாளர் டாக்டர் பிரவீன்குமார், மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜன், மூத்த நிர்வாகி மகுடீஸ்வரன், நகரச் செயலாளர் மிதுன் மனோகரன் பங்கேற்றனர்.



தேனி மாவட்ட டாஸ்மார்க் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு எல்.பி.எஃப், சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி, எல்.எல்.எப் இணைந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்–யிடம் பரிந்துரை கோரிக்கை மனு அளித்தனர்.



# டில்லியில் பாஜ தேசிய தலைவர் நிதின் நபினுடன் அண்ணாமலை சந்திப்பு!

புதுடில்லி, ஜூன் 02–

அண்ணாமலை பாஜவில் இருந்து விலக உள்ளதாக கூறப்படும் நிலையில், பாஜ தேசிய தலைவர் நிதின் நபினை சந்தித்து பேசினார்.

பாஜவில் தனக்கு பதவி எதுவும் வழங்கப்படாததால், அதிருப்தியில் உள்ள அண்ணாமலை, தனியாக கட்சி தொடங்க உள்ளதாக, தகவல் பரவியது. இந்தசூழ்நிலையில், அவரை பா.ஜ., டில்லி மேலிடம் அழைத்தது. எனவே, பா.ஜ., தேசிய தலைவர் நிதின் நபின், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை சந்திப்பதற்காக, நேற்று சென்னையிலிருந்து



விமானத்தில், டில்லி புறப்பட்டு சென்றார்.

டில்லியில் தனியார் நட்சத்திர ஹோட்டலில் அண்ணாமலை தங்கி இருக்கிறார்.

இந்நிலையில் (ஜூன் 02) பாஜ தேசிய தலைவர் நிதின் நபினை சந்தித்து பேசினார். அவர் பாஜவின் முக்கிய தலைவர்களை சந்தித்து வருகிறார்.

இதுவரை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்திக்க நேரம் கொடுக்கவில்லை என வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

வழக்கமாக, பா.ஜ., கொடி கட்டிய காரில், அண்ணாமலை வருவது வழக்கம். ஆனால், நேற்று சென்னை விமான நிலையத்திற்கு அவர் வந்தபோது, அவரது காரில் பா.ஜ., கொடி இல்லை.

அவரிடம், 'தனிக்கட்சி தொடங்க உள்ளீர்களா' என, செய்தியாளர்கள் கேட்டதற்கு, "இரண்டு நாளில், அனைத்திற்கும் பதில் அளிக்கிறேன்," எனக் கூறி சென்றார்.

இதனால் இன்று மாலை சென்னை திரும்ப இருக்கும் அண்ணாமலை முக்கிய அறிவிப்பு ஏதும் வெளியிடுவாரா என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# அதிமுக.,வில் புதிய கலகக்குரல்!

சென்னை, ஜூன். 02–

'இளைஞர்களுக்கு வழி விடுங்கள்' என, அ.தி.மு.க., தகவல் தொழில்நுட்ப அணி செயலர் ராஜ் சத்யன் வெளியிட்ட அறிக்கை, அக்கட்சிக்குள் புதிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க., வர்த்தகர் அணி இணை செயலர் மகேந்திரன், கட்சி தோல்வியடைந்த விரக்தியில் தற்கொலை செய்து கொண்டார்.

சமூக வலைதளங்களில் சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய மகேந்திரன், தற்கொலை செய்து கொண்டது, அ.தி.மு.க.,வினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக, அ.தி.மு.க., தகவல் தொழில்நுட்ப அணி செயலர் ராஜ் சத்யன், சமூக வலைதளமான 'எக்ஸ்' பதிவில், 'தேர்தல் தோல்விகளில் இருந்து மீண்டு வருவோம் என்ற நம்பிக்கையோடு உழைக்கும் கட்சிக்கு எதிராக, சிலரின் நடவடிக்கை இருந்ததால், இன்று ஒரு துாய தொண்டரை இழந்திருக்கிறோம்.

'தொண்டர்களின் மன நிலையை, ஒரு கணம் சிந்தித்து பார்த்திருந்தால், ஒரு துடிப்புள்ள தொண்டரை இழந்திருக்க மாட்டோம். தொண்டர்களை இனியும் மனவேதனை அடைய விடாதீர். வருங்கால இளைஞர்களுக்கு வழி விடுங்கள்' என குறிப்பிட்டு இருந்தார்.

ராஜ் சத்யனின், கருத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும், அ.தி.மு.க.,வுக்குள் விமர்சனம் எழுந்தது.



இதையடுத்து, பதிவை அவர் நீக்கி விட்டார்.

அ.தி.மு.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: த.வெ.க., வருகைக்கு பின், இளைஞர்கள் மத்தியில் அரசியல் உணர்வு எழுந்திருக்கிறது. அதை அ.தி.மு.க., பக்கம் திருப்ப, எந்த திட்டமும் இல்லை.

த.வெ.க., அமைச்சரவையின் சராசரி வயது, 45. ஆனால், அ.தி.மு.க., மாவட்டச் செயலர்கள், தலைமைக் கழக நிர்வாகிகளின் சராசரி வயது 65ஐ தாண்டுகிறது. வயதானவர்கள் தான் அ.தி.மு.க.,வில் நிரம்பி இருக்கின்றனர்.

ராஜ் சத்யன், கோவை சத்யன், கல்யாண சுந்தரம், சிங்கை ராமச்சந்திரன் என ஏராளமான இளைஞர்களுக்கு, கட்சியின் சார்பு அணிகளை தாண்டி, கட்சி க்குள் எவ்வித முக்கிய த்துவமும் கிடைப்பதில்லை.

இளைஞர்களை சேர்க்காமல் வெற்றி பெற முடியாது என்ற இளம் நிர்வாகிகளின் மனக்குமுறலை, ராஜ் சத்யன் பதிவிட்டுள்ளார். ஆனால், கட்சியின் சீனியர்களுக்கு, இந்த கருத்து பிடிக்கவில்லை என்பதால், கட்சி தலைமையிடம் புகார் கூறி, பதிவை உடனே நீக்க வைத்து விட்டனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மாநில அரசியலில் கனிமொழி? அடுத்தடுத்து கூட்டம் நடத்தும் தி.மு.க., மகளிர் அணியினர்!

சென்னை, ஜூன். 02–

சட்டசபை தேர்தலில், தி.மு.க., தோல்வியடைந்து ஆட்சியை பறிகொடுத்ததோடு, கட்சி தலைவர் ஸ்டாலின், பொதுச்செயலர் துரைமுருகன் ஆகியோரும் பெரும்பாலான அமைச்சர்களும் தோல்வியடைந்தனர்.

துாத்துக்குடியில் நடந்த தி.மு.க., செயல் வீரர்கள் கூட்டத்தில், 'தி.மு.க., துணை பொதுச் செயலர் கனிமொழி எம்.பி., மாநில அரசியலுக்கு வந்து, கட்சி வளர்ச்சிக்கு துணையாக இருக்க வேண்டும்' என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுபோல, ஸ்டாலினுக்கு, சேலம் மேற்கு மாவட்ட தி–.மு.க., நிர்வாகி கதிரவன் எழுதிய கடிதத்தில், 'கனிமொழியை மாநில அரசியலில் ஈடுபடுத்தி, முக்கிய பதவி வழங்கினால், பெண்கள் ஓட்டுகளை கவர முடியும்' என கூறியுள்ளார்.

இந்த சூழ்நிலையில், தி.மு.க., மகளிர் அணி சார்பில், தேர்தலில் உழைத்த பெண்களுக்கு பாராட்டு விழா நாளையும், தேர்தல் தோல்வி குறித்து கருத்து



கேட்பு கூட்டம் 13ம் தேதியும் நடைபெறுகின்றன.

தி.மு.க., மகளிர் அணி நிர்வாகிகள் கூறியதாவது: சென்னை, ஆர்.ஏ.,புரத்தில் நாளை மாலை 5:00 மணிக்கு, கனிமொழி எம்.பி., தலைமையில், தேர்தல் களத்தில் உழைத்த பெண்களுக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது. வரும் 13ம் தேதி, தி.மு.க., தலைமை அலுவலகமான அறிவாலயத்தில், தேர்தல் தோல்வி குறித்த கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது. இதில் ஸ்டாலின், கனிமொழி பங்கேற்கின்றனர்.

தோல்வியில் இருந்து மீண்டு, மகளிர் அணியை பலப்படுத்தவும், தோல்வியை வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றவும், கனிமொழியை மாநில அரசியலுக்கு கொண்டு வரும் முயற்சியாக இக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# எம்.பி.பி.எஸ். படிப்பை நிறைவு செய்ய மீண்டும் 10 ஆண்டுகள் அவகாசம்..!

சென்னை, ஜூன். 02–

தேசிய மருத்துவ ஆணையம் இளநிலை மருத்துவக்கல்வி (திருத்த) விதிமுறைகள் 2026 தொடர்பான அதிகாரப்பூர்வ வரைவு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது. அதில் மாணவர்கள் தங்களுடைய எம்.பி.பி.எஸ். மருத்துவப்படிப்பு சார்ந்த விதிமுறைகள் வெளியிடப்பட்டு உள்ளது. அந்த வரைவு அறிவிப்பில் எம்.பி.பி.எஸ். மருத்துவப்படிப்பை முடிப்பதற்கான கால அவகாசத்தை 10 ஆண்டுகளாக உயர்த்தி இருக்கிறது.

ஏற்கனவே இந்திய மருத்துவ கவுன்சில் (எம்.சி.ஐ.) விதிகளின்படி, ஒரு மாணவர் எம்.பி.பி.எஸ். படிப்பை முடிக்க 10 ஆண்டுகள் வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2023–ல் தேசிய மருத்துவ ஆணையம் இளநிலை மருத்துவக் கல்வி விதிமுறைகள், 2023–ஐ வெளியிட்டது. அந்த விதிமுறைகளின்படி, மாணவர்கள் தங்களுடைய எம்.பி.பி.எஸ். படிப்பை தாங்கள் அதில் சேர்ந்த



தேதியில் இருந்து 9 ஆண்டுகளுக்குள் கண்டிப்பாக முடிக்க வேண்டும் என்ற கால வரம்பை குறைத்தது.

இது எம்.பி.பி.எஸ். படிப்பை முடிக்கும் மாணவ–மாணவிகளுக்கு கடும் அழுத்தத்தை தந்ததாக கூறப்பட்டது.

மேலும் வெளிநாட்டில் மருத்துவப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு வெளிநாடு மருத்துவ பட்டதாரி உரிம விதிமுறைகள் 2021–ன்படி (எப்.எம்.ஜி.எல்.) 10 ஆண்டுகள் அவகாசம் இருக்கும்போது, இந்தியாவில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் ஏன் 9 ஆண்டுகளாக குறைக்க வேண்டும் என்ற கேள்வியும் அப்போது எழுந்திருந்தது.

இந்த சூழலில் தற்போது இளநிலை மருத்துவக்கல்வி விதிமுறைகள் 2023–ல் முக்கிய மாற்றங்களை கொண்டு வந்து, மாணவர்கள் எம்.பி.பி.எஸ். மருத்துவ படிப்பை (கட்டாய சுழற்சி மருத்துவ பயிற்சி உள்பட) முடிப்பதற்கான கால அவகாசத்தை 10 ஆண்டுகளாக உயர்த்த தேசிய மருத்துவ ஆணையம் இளநிலை மருத்துவக் கல்வி (திருத்த) விதிமுறைகள், 2026 தொடர்பான வரைவு அறிக்கையில் பரிந்துரைத்து இருக்கிறது.

இது உடல்நலக்குறைவு, குடும்பச்சூழல் அல்லது கல்வி ரீதியான பின்னடைவுகளால் பாதிக்கப்படும் மாணவ–மாணவிகளுக்கு உதவும் வகையில் இந்த கூடுதல் ஓராண்டு அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

**மின்னஞ்சல் முகவரி**

கால அவகாசம் 10 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டாலும், முதலாம் ஆண்டு எம்.பி.பி.எஸ். தேர்வை எழுதி தேர்ச்சி பெற அதிகபட்சமாக 4 வாய்ப்புகள் மட்டுமே வழங்கப்படும் என்ற விதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அவ்வாறு முடிக்காதவர்கள் படிப்பை தொடரமுடியாது.

இந்த வரைவு அறிக்கை பொதுமக்களின் பார்வைக்காகவும், மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்கள் போன்ற இதர பங்குதாரர்களின் கருத்துப்பதிவிற்காகவும் www.nmc.org.in என்ற இணையதளத்தில் வெளியிட்டிருக்கிறது.

இதன் மீது வருகிற 17–ந்தேதி வரை comments. ugregulations@nmc.org.in என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாக கருத்துகள் தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை துறைமுகத்தில் திடீர் வாயு கசிவு; பொதுமக்களுக்கு மூச்சு திணறல், அவதி!

சென்னை, ஜூன். 02–

சென்னை துறைமுகத்தில் திடீரென இன்று காலை வாயு கசிவு ஏற்பட்டு உள்ளது. இதனால் சாலையெங்கும் புகைமூட்டம் காணப்படுகிறது. அது காற்றில் விரைவாக பரவி பொதுமக்களுக்கும், சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கும் மூச்சு திணறல், இருமல், குமட்டல், கண், உடல் எரிச்சல் ஏற்பட்டு உள்ளது. கப்பலில் இருந்து சல்பேட் வாயு கசிந்துள்ளது என்றும் தீ விபத்து எதுவும் இல்லை என்றும் தகவல்



தெரிவிக்கின்றது.

இதனால், தலைமைச்செயலகம் உள்ளேயும் அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்டோருக்கு பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, துறைமுகத்துக்கு தீயணைப்பு வாகனங்கள் விரைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு, ஆம்புலன்சில் அழைத்து செல்லப்படு கின்றனர். ரசாயன பொடிகளை தூவி அதனை தணிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

திடீர் வாயு கசிவால், பொதுமக்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு உள்ளது. சுவாசிக்கவும் அவதிப்படுகின்றனர். பட்டாசு மருந்துபோன்று நெடி ஏற்பட்டு உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்து உள்ளனர்.

# 125 குவாரிகளில் ரெய்டு; கனிமவளத்துறை நடவடிக்கை!

சென்னை, ஜூன். 02–

தமிழகத்தில் விதிமீறல் புகார்கள் அடிப்படையில், ஐந்து மாவட்டங்களில் உள்ள, 28 நிறுவனங்களின் குவாரிகளில், கனிமவளத்துறை அதிகாரிகள் விசாரணையை முடுக்கி விட்டு உள்ளனர்.

தமிழகத்தில், கருங்கல் குவாரிகளில் விதி மீறல் நடப்பதாக புகார்கள் அதிகமாக வருகின்றன. எனவே, குவாரிகளை ஆய்வு செய்து, விதிமீறல்கள் குறித்து அறிக்கை அளிக்கும்படி, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் பிரபு, கடந்த வாரம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தென்காசி, கன்னியாகுமரி, விருதுநகர், மதுரை மாவட்டங்களில், அமைச்சர் நேரடியாக ஆய்வு மேற்கொண்டார். அதில் தெரியவந்த தகவல்கள்



அடிப்படையில், 155 குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்க, அமைச்சர் பிரபு உத்தரவிட்டார்.

இதையடுத்து, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில், கனிமவளத்துறையினர் சோதனைகளை முடுக்கி விட்டுள்ளனர். இதில், விதிமீறல்கள் இருப்பது தெரியவந்ததால், உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து, கனிமவளத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகம் முழுதும் விதிகளை மீறி செயல்படும் கல் குவாரிகள் தொடர்பான திடீர் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில், சென்னையை ஒட்டியுள்ள செங்கல்பட்டில் 7; காஞ்சிபுரம் 5; திருவண்ணாமலை 6; ராணிப்பேட்டை 6; திருவள்ளூர் 4 என, மொத்தம் 28 நிறுவனங்களின் குவாரிகளில் விதிமீறல் புகார்கள் வந்துள்ளன.

இந்நிறுவனங்களுக்கு தொடர்புள்ள, 125க்கும் மேற்பட்ட குவாரிகளில் ஆய்வு நடந்து வருகிறது. அனுமதிக்கப்பட்ட காலத்தை கடந்து செயல்படும் குவாரிகளை உடனடியாக மூடவும், அனுமதிக்கு மாறாக, அதிக அளவு கருங்கல் எடுக்கப்பட்ட குவாரிகளை, 'சீல்' வைக்க உத்தரவிட்டு வரு கிறோம்.

கடந்த சில நாட்களாக இந்த பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இது தொடர்பான விபரங்கள், அறிக்கையாக அரசுக்கு அனுப்பப்பட உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# பரந்தூர் விமான நிலையம் காலத்தின் கட்டாயம் - முதல்வரிடம் அறிக்கை வழங்க விமான நிலைய ஆணையம் திட்டம்!

கடந்த திமுக ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் 5,600 ஏக்கர் பரப்பளவில் புதிய சர்வதேச விமான நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் தினசரி 60,000க்கும் மேற்பட்ட பயணிகள் மற்றும் 400க்கும் மேற்பட்ட விமான போக்குவரத்து நடந்து வருகிறது.

ஆனால் விமானத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரிப்பதால் நெருக்கடியை சமாளிக்க பரந்தூர் திட்டம் கொண்டு வரப்பட்டது.

**ஏரோட்ரோபோலிஸ்**

மேலும் பரந்தூர் விமான நிலையத்துடன் அதனை சுற்றி நவீன சரக்குக் கிடங்குகள், ஏற்றுமதி, இறக்குமதி மையங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்கள் அடங்கிய 'ஏரோட்ரோபோலிஸ்' நகரம் ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டது.

இதனால் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களின் தொழில் வளர்ச்சி பல மடங்கு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டது.

இந்த ஒட்டுமொத்த திட்டத்திற்காக ஏற்கனவே 3,700 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 1,700 ஏக்கர் விவசாய நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



அரசியல்

ஆனால் பரந்தூர் மக்கள் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை முன்னெடுத்தனர். 2 ஆண்டுகள் முன் கட்சி தொடங்கிய விஜய், தனது முதல் அரசியல் செயல்பாடாக பரந்தூர் சென்று அம்மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். பரந்தூரில் விமான நிலையம் வராது என்ற உறுதியை விவசாயிகளுக்கு விஜய் கொடுத்தார்.

**சிப்காட்**

தற்போது விஜய் தலைமையில் தவெக ஆட்சி அமைந்துள்ள நிலையில் பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

இதுதொடர்பாக புதிய அரசு மேற்கொண்ட ஆலோசனையில், கையகப்படுத்தப்பட்ட 1,700 ஏக்கர் நிலத்தில் சிப்காட் கொண்டு வர திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது. இது பலரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் பரந்தூரில் விமான நிலையம் அவசியம் குறித்து விமான நிலைய ஆணைய அதிகாரிகள் ஆய்வறிக்கையை தயாரித்துள்ளனர்.

**விமான நிலைய ஆணையம்**

மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து, விமான நிலைய ஆணையம் ஆய்வறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது. அந்த அறிக்கையை விரைவில் முதல்வர் விஜய்யிடம் அதிகாரிகள் சமர்ப்பிக்க உள்ளனர்.

அறிக்கை குறித்து பேசிய ஆணைய அதிகாரிகள், சென்னையில் 2வது விமான நிலையம் என்பது காலத்தின் கட்டாயம். அதற்காகவே பரந்தூர் விமான நிலையத்தை பரிந்துரைத்துள்ளோம். இங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு விமானங்களை இயக்க முடியும். அடுத்த 30 முதல் 50 ஆண்டுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் விமான நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கான நில அமைப்பியல், சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் போக்குவரத்து இணைப்பு குறித்த ஆய்வுகள் அனைத்தையும் முடித்து அறிக்கை தயாரித்துள்ளோம்.

விமான நிலையத்தை சுற்றி உருவாக உள்ள ஏரோட்ரோபோலிஸ் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். இந்த திட்டம் தொடர்பாக விரைவில் முதல்வர் விஜய்யை சந்திக்க உள்ளோம்" என்று தெரிவித்துள்ளனர்.

# ஈரானின் ரேடாரில் சிக்காமல்.. 70 கப்பல்களை ஹார்முஸ் நீரிணை வழியே பாதுகாப்பாக வெளியேற்றிய அமெரிக்கா!

டெஹ்ரான், ஜூன். 02–

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே தற்காலிக போர்நிறுத்தம் நிலவி வந்தபோதிலும், சமீபத்தில் ஈரான் மீது அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதல்களும், அதற்குப் பதிலடியாக குவைத் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களும் இந்த கடல் வழிப்பாதையை மீண்டும் பதற்றமடையச் செய்துள்ளன.

இதற்கிடையே அமெரிக்க ராணுவம் கடந்த 3 வாரங்களில் 70 வணிகக் கப்பல்களைப் பாதுகாப்பாக ஹார்முஸ் நீரிணை வழியே வழிநடத்தியுள்ளது. ஈரானின் பாதுகாப்பு ரேடார்களில் சிக்காமல் இருக்க ரகசிய வழிசெலுத்தல் என்ற தந்திரோபாய முறையை அமெரிக்கா பயன்படுத்தியுள்ளது.

இந்த 70 வணிகக் கப்பல்களும் தங்களின் இருப்பிடத்தைக் காட்டும் சமிக்ஞைகளை முழுமையாக அணைத்து வைக்குமாறு அமெரிக்க மத்திய கட்டளை அலுவலகம்



அறிவுறுத்தியதை தொடர்ந்து ஈரானிய ரேடார்களால் இக்கப்பல்களைக் கண்காணிக்க முடியாது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020